# <u>இராமநாதபுரம் நகராட்சி</u>

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 அக்டோபர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 31.10.2019-ந் தேதி காலை 11.05 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் 1</u>**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் அக்டோபர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.1026</u>–** பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் 2</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் அக்டோபர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.1027</u>–** பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் 3</u>**

இராமநாதபுரம் நகராட்சி எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர் கொள்ள ஏதுவாக Power Saw –2 எண்ணம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,000/–த்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: /2019/இ1

**<u>தீர்மானம் எண்.1028</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 4</u>**

தலைமை தேர்தல் அலுவலர் அவர்களின் காணொலி காட்சி கூட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் (EVP) Video Conference வாக்காளர்களின் அடையாள அட்டை எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணியினை செய்ய தெரிவிக்கப்பட்டது. அதன்படி 211 இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி, இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 59 பாகங்களில் உள்ள மொத்த வாக்காளர் எண்ணிக்கை 55463, வாக்காளர் அடையாள அட்டை எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணியினை செய்வதற்கும் (GIS) Online வாக்கு சாவடியை மூலம் வரைபடம் போடுவதற்கும் உத்தேச செலவினமாக ரூ.3,00,000/– (மூன்று லட்சம்) பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.1029</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 5</u>**

இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் நிதி திட்டம் 2018–19, Providing Internal Plumping Works for Water Supply Hsc's Ramanathapuram Municipaltiy(3500-Nos) இணைப்பு வழங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005 அவர்களது செயல்முறை கடிதம் எண்–13277/2018/WS1, நாள்.19.06.2018–ன்படி ரூ.121.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில், தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது செயல்முறை கடிதம் எண்.13277/2018/DO2, நாள்.23.01.2019–ன்படி தொழில் நுட்ப அனுமதி (Technical Sanction) பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இரு உறைமுறையில் (Two Cover Systerm) 27.09.2019–ல் ஆறாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியை நிர்ணயம் செய்ய தொழில் நுட்ப கூராய்வு ஓப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஓப்பந்தப்புள்ளி குழுவால் (Tender Committee) கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், தொழில் நுட்ப நிபந்தனைகளை (Technical Cretia) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக முடிவு செய்து அதற்குரிய (Price Bid) யினை 24.10.2019 அன்று திறக்க ஒப்பந்ததாரர்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் விலைப்பட்டியல் ஒப்பு நோக்கியதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய மதிப்பு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.நாகராஜன், ஒப்பந்ததாரர், எண்–21, திருவள்ளுவர் தெரு, கேணிக்கரை, இராமநாதபுரம். | 1,21,00,000/– | 1,26,18,520/– | 4.96% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | திரு.ஜி.மங்களேஷ், ஒப்பந்ததாரர், எண்–1/146, வடக்குரத தெரு, திருஉத்திரகோசமங்கை, இராமநாதபுரம். | 1,21,00,000/– | 1,26,62,200/– | 5.33% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமான விலைவிகிதம் வழங்கியுள்ளார்கள். அவற்றில் கூடுதலில் குறைவான (4.96% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.நாகராஜன், எண்–21, திருவள்ளுவர் தெரு, கேணிக்கரை, இராமநாதபுரம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு– 1)</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) பகுதி–2, பிரிவு 2 : 7 :2–ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5% சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பத்நப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. எனவே ஒப்பந்ததாரர் திரு.ஆர்.நாகராஜன், எண்–21 திருவள்ளுவர் தெரு, கேணிக்கரை, இராமநாதபுரம் அவர்கள் அளித்துள்ள 4.96% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.

**3)**மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் ஒப்பந்த தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுவதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1677/2018/இ1

**<u>தீர்மானம் எண்.1030</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 6</u>**

இராமநாதபுரம் நகராட்சி , Hudco CSR Fund நிதி உதவியால் M.S.K தொடக்கப்பள்ளியில் சுகாதார வளாகம், அலுவலர்கள் அறை மற்றும் வள்ளர் பாரி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு 18.10.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய மதிப்பு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 50,00,000/– | 52,09,723/– | 4.96% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி.ஆர்.இராஜசுலோச்சனா, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 50,00,000/– | 52,61,372/– | 6.01% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் கூடுதலில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, இராமநாதபுரம் அவர்களது

(4.96% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலில்) குறைந்த ஒப்பந்தத்தினை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.

2)தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) பகுதி–2, பிரிவு 2 : 7 :1–ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5% சதவிகிதம் வரை கூடுதலினை மன்றமே அனுமதிக்கலாம் என உள்ளது. அதன்படி ஒப்பந்ததாரர் திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி அவர்கள் அளித்துள்ள 4.96% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.

3)மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டு விலை விகிதத்தை விட கூடுதலாக ஏற்படும் செலவினங்களுக்கு நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுவதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5255/2018/இ1

**தீர்மானம் எண்.1031**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 7**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடைத் திட்டம் அரசாணை எண்.408 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்.07.10.2005–ல் நிர்வாக அனுமதி ரூபாய்.30.00 கோடிக்கும் அதனை தொடர்ந்து திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை எண்.550 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்.31.12.2019–ல் ரூபாய்.31.51 கோடிக்கும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ் அனுமதியளிக்கப்பட்டது.

இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.06.2013–ல் துவக்கி வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 கழிவு நீர் அகற்று நிலையங்களும், இரண்டு சிறிய கழிவு நீர் உந்து நிலையங்களும் உள்ளன. இத்திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கழுகூரணி கிராம ஊராட்சியில் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 64.382 கி.மீ நீளம் கழிவு நீர் குழாய்கள் பராமரிக்கப்படுகிறது. 2601 மனித ஆய்வுக் குழிகள் உள்ளன. கழிவு நீர் பம்பிங் பிரதான குழாய் 12.50 கி.மீ நீளம் பராமரிக்கப்படுகிறது. பாதாள சாக்கடை திட்டப் பராமரிப்பில் மொத்தம் 450.00 குதிரை திறன் கூடுதல் உள்ள மின் மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 10505 வீட்டு இணைப்புகளில் இதுவரை 10271 வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள வீட்டு இணைப்புகள் டிசம்பர் 2019க்குள் முடிக்கப்பட்டு விடும்.

பாதாள சாக்கடை திட்டத்தினை, தினசரி பராமரிப்பு பணிகளான, கழிவுநீர் அடைப்புகள் சரி செய்தல், மின் மோட்டார்கள் பழுதுகள் சரி செய்தல், கழிவுநீர் பிரதான மெயின் குழாய்கள் (Pumping Main) கசிவுகள், ஆய்வுக் குழி மற்றும் கழிவு நீர் கிணறுகளில் உள்ள மண்கசடுகள் அள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. மேற்கண்ட பணிகளை தினசரி மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை தற்பொழுது உள்ளது. இத்திட்டம் முழு அளவில் முடிக்கப்பட்டுள்ள நிலையில் போதிய பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியாளர்கள் இல்லாததால் தினசரி அதிகமான பாதாள சாக்கடை சம்மந்தமான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.

எனவே தகுதியான பணியாளர்களைக் கொண்டு மேலும் இத்திட்டத்தினை நல்ல முறையில் பராமரித்திட வேண்டியதன் அவசியம் பொருட்டு, இயக்குதலும் மற்றும் பராமரிப்பு (Operation and Maintanence) பணியினை தனியார் மயமாக்கிடவும், அதற்கான வருடாந்திர பராமரிப்பு செலவினம் ரூபாய்.111.65 லட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம், பாதாள சாக்கடை திட்டம் இயக்குதலும் பேணுதலும் பராமரிப்பினை அவசர அவசியம் முன்னிட்டு முன் இசைவு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களுக்கு திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: 3535/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1032</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக இந்நகராட்சியிலிருந்து DBC பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்பொழுது மழைக்காலம் ஆரம்பரம் ஆகிவிட்டதால் கொசு உற்பத்தி அதிகமாகி காய்ச்சலால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை கூடுதலாகி வருகின்றது. தற்போது 40 நபர்கள் இப்பணியில் உள்ளனர். 21.10.2019–ம் தேதிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் மழைக்காலம் ஆரம்பம் ஆகிவிட்டபடியால் கூடுதலாக DBC பணியாளர்களை நியமித்து பணி செய்ய அறிவுறுத்தியுள்ளார். அதன் பேரில் இந்நகராட்சி பகுதியில் 60 DBC பணியாளர்களுக்கு ஊதியமாக வேலை நாள் 1க்கு ரூ.200/– மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இப்பணிக்கு பணியாளர்கள் வர மறுக்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 12.10.2018–ம் தேதிய ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் ந.க.எண்.2571/2017/ஜே1, நாள்.14.11.2018–ல் தெரிவித்துள்ள மஸ்துார் இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை வழங்கும்படி காண்பித்து அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரில் இந்நகராட்சிக்கு 60 DBC பணியாளர்களும்,

அன்னாருக்கு தினசரி வேலை நாள் ஊதியமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2019–2020ம் ஆண்டு விலை விகித பட்டியலில் தெரிவித்துள்ள மஸ்தூர் என்ற இனத்தில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.372/– ரூபாய் (முன்னூற்றி எழுபத்தி இரண்டு) வழங்கவும், இப்பணியினை தொடர்ந்து ஒரு ஆண்டு முழுவதும் செய்திடவும், இதற்கான செலவினம் ரூ.80,35,200/– பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3408/2019/எச்1

**<u>தீர்மானம் எண்.1033</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி 2019–2020 ஆண்டிற்கான தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு, அலுவலக உள் மற்றும் வெளி பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு தையல் கூலி தொகை மற்றும் சீருடைத்துணிகள் ஆகியவை வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4587/2018/எச்1

**<u>தீர்மானம் எண்.1034</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10</u>**

211 இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணி செய்வதற்கு உள்ளூர் (Net Center) நிறுவனங்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | சவரி ஜெராக்ஸ்<br>படிவம் 1–க்கு ஸ்கேனிங் மற்றும் Uploaded | ரூ.6/– |
| 2) | Copys Shine ஜெராக்ஸ் மற்றும் Colour Scan Printing படிவம் 1–க்கு<br>Scaning மற்றும் Uploaded | ரூ.7/– |
| 3) | N.R.ஆர்க்கி டெக்ஸ்<br>படிவம் 1–க்கு Scaning மற்றும் Uploaded | ரூ.5/– |

மேற்காணும் விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "N.R.ஆர்க்கி டெக்ஸ், இராமநாதபுரம்" என்பவருக்கு பணி உத்திரவு வழங்கவும் தொகை வழங்கவும் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3915/2019/எப்1

**தீர்மானம் எண்.1035–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 11**

இராமநாதபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி.வள்ளி, க/பெ. லேட்.எம்.முனியாண்டி என்பவர் மதுரை தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது C.P.No.135/2014 W.P(MD)No.1179/2018 தொடர்பாக வழக்குக் கட்டணம் மற்றும் வழக்கறிஞர் தொகை ரூ.15,000/–ம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு –**மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1721/2019/எச்1)

**தீர்மானம் எண்.1036–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 12**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை, மற்றும் Door 2 Door சேகரிப்பு, தெருக்கள் சுத்தப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு, தனியார் மயம் மூலம் 150 நபர்களை அமர்த்தும் பணிக்கு (ஒரு வருடம்) ஒப்பந்தப்புள்ளி, 15.10.2019 அன்று கோரப்பட்டதில், மொத்தம் 6 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியற்றவை என ஒப்பந்த குழுவால் நிராகரிக்கப்பட்டு, தகுதியுள்ள கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பு நோக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதம் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைவிகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1 | SUN (Tamil Nadu) Security Management Service (Pvt)maduria | Rs:2,86,03,590/– (1.02% கூடுதல்) |
| 2 | EXERNET 8, M.M காம்ப்ளக்ஸ், கல்பாலம், ரோடு , கோரிப்பாளையம், மதுரை–2 | Rs:2,83,05,750/– (0.02% குறைவு) |
| 3 | SHARP (Madurai) Security Management, (Pvt) Madurai. | Rs:2,85,47,197/– (0.82% கூடுதல்) |
| 4 | A.V.M.Service Point Rajapalayam. | Rs:2,83,60,500/– (0.17% கூடுதல்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள "M/s EXERNET 8, M.M காம்ப்ளக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளையம், மதுரை–2" நிறுவனத்தின் 0.02% (மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1037**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சி, புதிய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் பிரதான குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பேருந்து நிலையம் அருகில் உடைத்துள்ளது. இக்குழாய் 5'' GI பகிர்மான குழாய் ஆகும். மேலும் சுமார் 10 மீட்டர் நீளத்திற்கு இற்றுப் போய் உள்ளதால் அதிகப்படியான குடிநீர் வீணாக வெளியேறுகின்றது. எனவே மேற்படி குழாய்களை உடனே மாற்றியமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்களது ஆய்வில் தெரிவிக்கப்பட்டதற்கு அவ்விடத்தியிலிருந்து செல்லும் இரண்டு பகிர்மானக் குழாய்களையும் மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.54,000/–த்திற்கு குடிநீர் நிதியின் மூலம் பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3411/2019/இ1)

**தீர்மானம் எண்.1038**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 14**

இராமநாதபுரம் நகராட்சி, வளர்ச்சி மற்றும் திட்டத்தின் சாதனைகள் குறித்து தொழில் மலர் –2019ல் விளம்பரம் வெளியிட்டதற்கு கீழ்க்கண்டவாறாக உள்ள விளம்பரதாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விளம்பரதாரர்களின் பெயர்கள் | பில் நம்பர் & நாள் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | தினசெய்தி – நாளிதழ் | CHN-19–20/0750, நாள்.07.10.2019 | 9,450/– |
| 2 | தினமணி – நாளிதழ் | MDU/TN-30059425, நாள்.12.10.2019 | 25,200/– |
| 3 | தினசூரியன் – நாளிதழ் | 5138, நாள்.16.10.2019 | 22,000/– |
| 4 | தினகரன்– நாளிதழ் | 3300186221 , நாள்.07.10.2019 | 23,100/– |
| 5 | தீக்கதிர்– நாளிதழ் | MDU/472/19-20 ,நாள்.06.10.2019 | 9,900/– |
| 6 | இந்து தமிழ் இசை நாளிதழ் | 09.10.2019 | 16,000/- |
| 7 | தினதந்தி நாளிதழ் | MDU/19-20-0016647, நாள்.06.10.2019 | 41,580/– |

**<u>அலுவலக குறிப்பு – 1</u>)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்கண்ட வரிசை எண் 1 முதல் 7 வரையிலான விளம்பரதாரர்களுக்கு பட்டியல் தொகை தனித்தனியே வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3877/2014/இ1)

**<u>தீர்மானம் எண்.1039</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் 15</u>

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரம் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் லாரி (Compactor) வாகனத்திற்கு டயர்கள் அனைத்தும் தேய்த்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் புதியதாக டயர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.81,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2985/2019/எச்1

**<u>தீர்மானம் எண்.1040</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி